## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## திருவேங்கடமுடையான் பாசுரங்கள் - 1

---

### திருவேங்கடமுடையான் மீது ஆழ்வார்கள் அருளிய பாசுரங்கள்

**1. பெரியாழ்வார் அருளியவை**

1.சுற்றும் ஒளி வட்டம் சூழ்ந்து சோதி பரந்து எங்கும்
எத்தனை செய்யினும் என் மகன் முகம் நேர் ஒவ்வாய்!
வித்தகன் வேங்கடவாணன் உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே அம்புலீ! கடிதோடி வா!

2.என்னிது மாயம்? என்னப்பன் அறிந்திலன்!
முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் என்ன
மன்னு நமுசியை வானில் சுழற்றிய
மின்னு முடியனே! அச்சோ! அச்சோ! வேங்கடவாணனே! அச்சோ! அச்சோ!

3.தென் இலங்கை மன்னன் சிரம் தோள் துணி செய்து
மின் இலங்கு பூண் விபீடண நம்பிக்கு
என் இலங்கு நாமத்தளவும் அரசென்ற
மின் அலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா!
வேங்கடவாணற்கு ஓர் கோல் கொண்டு வா!

4.மச்சொடு மாளிகை ஏறி மாதர்கள் தம் இடம் புக்கு
கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகில் அவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்! நீள் திருவேங்கடத்து எந்தாய்!
பச்சைத் தமனகத்தோடு பாதிரிப்பூச் சூட்ட வாராய்!

5.போதர் கண்டாய்! இங்கே போதர் கண்டாய்! போதரே என்னாதே போதர் கண்டாய்!
ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன்!
கோது கலமுடைக் குட்டனேயோ!!! குன்று எடுத்தாய்! குடம் ஆடு கூத்தா!
வேதப்பொருளே! என் வேங்கடவா! வித்தகனே! இங்கே போதராயே!

6.கடியார் பொழில் அணி வேங்கடவா! கரும் போர் ஏறே! நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் கொள்ளாதே போனாய் மாலே!

கடிய வெங்கான் இடைக் கன்றி பின் போன சிறுக்குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி, உன் கண்கள் சிவந்தாய் அசைந்திட்டாய் நீ எம்பிரான்!

7.சென்னி ஓங்கு தண் திருவேங்கடமுடையாய்! உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும் என் உடைமையையும் உன் சக்கர பொறி ஒற்றிக் கொண்டு
நின் அருளே புரிந்திருந்தேன் இனி என் திருக்குறிப்பே!?

---

**2.ஸ்ரீஆண்டாள் நாச்சியார் அருளியவை**

8.தை ஒரு திங்கள் தரை விளக்கித் தண் மண்டலம் இட்டு மாசி முன் நாள்
ஐய! நுண் மணல் கொண்டு தெரு அணிந்து, அழகினுக்கு அலங்கரித்து அனங்க தேவா!
உய்யவும் மாங்கொலோ என்று சொல்லி, உன்னையும் உம்பியையும் தொழுதேன்,
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே!

9.மத்த நன்னறு மலர், முறுக்க மலர் கொண்டு முப்போதும் உன்னடி வணங்கி,
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து, வாசகத்து அழித்து உன்னை வைதிடாமே
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு, கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி;
வித்தகன் வேங்கடவாணன் என்னும் விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே!

10.காட்டில் வேங்கடம், கண்ணபுர நகர்
வாட்டம் இன்றி மகிழ்ந்து உறை வாமனன்
ஓட்டரா வந்து என் கைப் பற்றி, தன்னொடும்
கூட்டுமாகில், நீ கூடிடு கூடலே!

11.வெள்ளை விளிச் சங்கு இடங்கையில் கொண்ட விமலன் எனக்கு உருக் காட்டான்!
உள்ளம் புகுந்து என்னை நைவித்து நாளும் உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும்
கள்ளவிழ் செண்பகப் பூ மலர் கோதிக் களித்து இசை பாடும் குயிலே!
மெள்ள விருந்து மிழற்றி மிழற்றி என் வேங்கடவன் வரக் கூவாய்!

12.பாடும் குயில்காள்! ஈது என்ன பாடல்? நல் வேங்கட
நாடர் நமக்கு ஒரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்!
ஆடும் கருளக் கொடி உடையார் வந்து அருள் செய்து
கூடுவராயில் கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே!

13.மழையே! மழையே! மண் புறம் பூசி உள்ளாய் நின்று
மெழுகு ஊற்றினாற் போல், ஊற்று நல் வேங்கடத்துள் நின்ற
அழகப் பிரானார் தம்மை என் நெஞ்சத்து அகப்பட
தழுவி நின்று என்னைத் ததைத்துக் கொண்டு ஊற்றவும் வல்லையே?!

<u>**விசேஷ பாசுரங்கள்:**</u>

14.விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்காள்!
தெண்ணீர் பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே?
கண்ணீர்கள் முலைக் குவட்டில் துளி சோரச் சோர்வேனை
பெண்ணீர்மை ஈடழிக்கும் இது தமக்கோர் பெருமையே!

15.மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்! வேங்கடத்துச்
சாமத்தின் நிறம் கொண்ட தாடாளன் வார்த்தை என்னே?
காமத்தீயுள் புகுந்து, கதுவப்பட்டு, இடைக் கங்குல்
ஏமத்தின் தென்றலுக்கு இங்கு இலக்காய் நான் இருப்பேனே!

16.ஒளி வண்ணம், வளை, சிந்தை, உறக்கத்தோடு இவை எல்லாம்
எளிமையால் இட்டு என்னை ஈடு அழியப் போயினவால்
குளிர் அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம் பாடி,
அளி ஒத்த மேகங்காள்! ஆவி காத்து இருப்பேனே!

17.மின்னாகத்து எழுகின்ற மேகங்காள்! வேங்கடத்துத்
தன்னாகத் திருமங்கை தங்கிய சீர் மார்வர்க்கு,
என்னாகத்து இளம் கொங்கை விரும்பித்தாம் நாள் தோறும்
பொன்னாகம் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே!

18.வான் கொண்டு கிளர்ந்து எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்துத்
தேன் கொண்ட மலர் சிதறத் திரண்டு ஏறிப் பொழிவீர்காள்!
ஊன் கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடல் இடந்தான்
தான் கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே!

19.சலம் கொண்டு கிளர்ந்து எழுந்த தண் முகில்காள்! மாவலியை
நிலம் கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!
உலங்குண்ட விளங்கனி போல் உள் மெலியப் புகுந்து என்னை
நலம் கொண்ட நாரணற்கு என் நடலை நோய் செப்புமினே!

20.சங்கமா கடல் கடைந்தான் தண் முகில்காள்! வேங்கடத்துச்
செங்கண் மால் சேவடிக் கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்!
கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பு அழியப் புகுந்து ஒரு நாள்
தங்குமேல் என் ஆவி தங்கும் என்று உரையீரே!

21.கார்காலத்து எழுகின்ற கார்முகில்காள்! வேங்கடத்துப்
போர்காலத்து எழுந்து அருளிப் பொருதவனார் பேர் சொல்லி
நீர் காலத்து எருக்கினம் போல் பழவிலை போல் வீழ்வேனை
வார் காலத்து ஒரு நாள் தம் வாசகம் தந்து அருளாரே!

22.மதயானை போல் எழுந்த மாமுகில்காள்! வேங்கடத்தைப்
பதியாக வாழ்வீர்காள்! பாம்பு அணையான் வார்த்தை என்னே?
கதி என்று தானாவான் கருதாது ஓர் பெண் கொடியை
வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே!!!

23.நாகத்தின் அணையானை நன்னுதலாள் நயந்து உரை செய்
மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை தமிழ்
ஆகத்து வைத்து உரைப்பார், அவர் அடியார் ஆகுவரே!

---

**3.<u>திருப்பாணாழ்வார் அருளியவை</u>**

24. அமலன் ஆதி பிரான், அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர் கோன், விரையார் பொழில் வேங்கடவன்,
நிமலன், நின்மலன், நீதி வானவன், நீள் மதிள் அரங்கத்து அம்மான், திருக்
கமல பாதம் வந்து என் கண்ணில் உள்ளன ஒக்கின்றதே!

25. மந்தி பாய் வடவேங்கட மாமலை, வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவின் அணையான்
அந்தி போல் நிறத்து ஆடையும், அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில்
உந்தி மேல் அதன்றோ அடியேன் உள்ளத்து இன் உயிரே!

---

**T0TAL SONGS: 25**